**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.18/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயன் | மதம் | : இந்து |
| த/பெ | : ரோசிக்கான் | ஜாதி | : -- |
| வயது | : 62 | கிராமம் | : அலமேலுமங்காபுரம் |
| தொழில் | : தையல் கடை | வட்டம் | : திருத்தணி |

**16.10.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த சொத்து சம்மந்தமாக ஏற்கனவே நானோ என் முன்னோரோ வழக்கு தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் நான்கு எல்லை தெரியுமா என்றால் தெரியும். கிழக்கே நாகரத்தினம் வீட்டு மனை, மேற்கே கோபால் வீட்டு மனை, வடக்கே வேலாயுதம் வீட்டு மனை மற்றும் என் வீட்டு மனை, தெற்கே எனது மாங்காய் தோப்பு உள்ளது. வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.32/21 ஆகும். புல எண்.32/21க்கு என் பெயரில் பட்டா உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் பக்கத்தில் உள்ள வீட்டிற்கு பட்டா கொடுத்துள்ளார்கள். வழக்கு சொத்தில் குளியலறையும் ஆடு மாடும் கட்டி வைத்திருந்தேன். வழக்கு சொத்திற்கு எனக்கு பட்டா கொடுக்கவில்லை.

2. எந்த வருடத்தில் வட்டாட்சியரிடம் பட்டாவிற்கு மனு அளித்தேன் என்றால் ஒவ்வொரு வருடமும் கொடுத்தேன். வட்டாட்சியரிடம் பட்டா கோரி மனு அளித்த போது என்னுடைய ஆவணம் எதை இணைத்து கொடுத்தேன் என்றால் என் பாட்டி அம்மணியம்மாள் எழுதி கொடுத்த உயில் பத்திரம், வரி ரசீதுகள், மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவிற்கான ஒப்புகை சீட்டுகள் ஆகியவற்றை இணைத்து தாக்கல் செய்தேன். நான் வரி செலுத்தியதாக கூறியிருப்பதில் அந்த ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் கைவசம் வைத்துள்ளேன். நீதிமன்றம் கேட்கும்போது தாக்கல் செய்கிறேன். **(சாட்சி கைவசம் வைத்திருந்த வரி ரசீதுகளை எடுத்து காண்பித்தார்)** நான் கைவசம் வைத்துள்ள வீட்டு வரி ரசீதுகள் வழக்கு சொத்திற்கானது இல்லை என்றால் பக்கத்தில் உள்ள வீட்டிற்கும் வழக்கு சொத்திற்கு சேர்ந்தது தான் ரசீதுகள்.

3. என் கைவசம் வைத்துள்ள ரசீதுகள் அனைத்தும் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள வீட்டு மனைக்குரியவை என்பதால்தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றம் கேட்கும்போது தாக்கல் செய்ய வேண்டும் என கைவசம் வைத்துள்ளேன். நான் பட்டா கோரி மனு அளித்தபோது என் தரப்பில் வருவாய் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்துதான் எனக்கு பட்டா கொடுத்தார். நான் அனைத்து ஆவணங்களையும் பட்டா கோரி அளித்த மனுவுடன் சேர்த்து அளித்துள்ளேன். 01.12.2022ம் தேதியிட்ட வட்டாட்சியரின் அறிக்கையின்படி வா.சா.ஆ 3 புல வரைபடம் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 25.08.2022ம் தேதியில் என்னையும் பிரதிவாதியையும் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது பட்டா வழங்குவதற்காக வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் 01.12.2022ம் தேதியிட்ட வட்டாட்சியர் உத்தரவு பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பி.வா.சா.ஆ 1ல் பத்தி 2ல் "**25.08.2022 அன்று வருவாய் கோட்ட அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் திரு.மனோகரன் த/பெ வேலாயுதம் என்பவர் அலமேலுமங்காபுரம் கிராமம், கிராம நத்தம் புல எண்.32/21 பரப்பு 57 ச.மீட்டரில் 30 ச.மீ பரப்பிற்கு திருத்தணி வட்டாட்சியர் அவர்களின் ந.க்எ.ண12158/2024 நாள். .12.2004ன்படி தன்னுடைய தாயார் திருமதி.காமாட்சியம்மாள் க/பெ. வேலாயுதம் என்பவர் பெயரில் பட்டா பெற்றுள்ளதாக கூறியுள்ளார். ஆனால் பட்டா வழங்கப்பட்ட விவரங்கள் கிராமப் பதிவுகளிலும் இல்லை பதிவறையிலும் இல்லை. அந்தத் தோராயப்பட்டா அசல் ஆவணத்தையும் திரு.மனோகரன் விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை**" என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தோராயப்பட்டா மனோகரன் சமர்ப்பித்துள்ளார் என்றும் ஆனால்இந்த உத்தரவில் தவறாக குறிப்பிட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அவர் எந்த ஆவணத்தையும் காண்பிக்கவில்லை.

5. பி.வா.சா.ஆ 1ல் பத்தி 2ல் "**இரண்டாம் மனுதாரர் திரு.விஜயன் த/பெ ரோஸி என்பவருக்கு அலமேலுமங்காபுரம் கிராமம், கிராம நத்தம் புல எண்.32/21 பரப்பு 57 ச.மீட்டரில் 30 ச.மீ பரப்பிற்கு, பட்டா வழங்க விசாரணை மேற்கொண்டு தங்கள் நிலையிலேயே ஆணை வழங்கலாம் என பார்வை 3ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது**" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அவ்வாறு என்ன ஆவணங்களை தாக்கல் செய்தேன் என்றால் என் பாட்டி அம்மணியம்மாள் எழுதி கொடுத்த உயில் பத்திரம், வரி ரசீதுகள், மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவிற்கான ஒப்புகை சீட்டுகள், VAO, RI கொடுத்த அறிக்கைகள் ஆகியவற்றை இணைத்து தாக்கல் செய்தேன்.

6. பி.வா.சா.ஆ 1ல் பத்தி 3ல் "**திருத்தணி வருவாய் கோட்ட அலுவலர் அவர்களின் கடிதம் அரசு வழக்கறிஞர் வழங்கியுள்ள சட்டக்கருத்துரு, வருவாய் ஆய்வாளரின் அறிக்கை,**

**இவ்வலுவலக விசாரணை மற்றும் மனுதாரர் சமர்ப்தித்துள்ள ஆவணங்கள் ஆகியவற்றின்அடிப்படையில் மனுதாரர்களில் ஒருவரான திரு.விஜயன் த/பெ ரோஸி என்பவருக்கு அலமேலுமங்காபுரம் கிராமம், கிராம நத்தம் புல எண்.32/21 பரப்பு 57 ச.மீட்டரில் 27 பரப்பிற்கு உட்பிரிவு செய்து பட்டா வழங்க உத்தரவிடப்படுகிறது"** என கூறப்பட்டுள்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1ன் அடிப்படையில்தான் எனக்கு பட்டா வழங்கப்பட்டது என நான் எங்கும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் எனக்கு வழங்கப்பட்ட பட்டா சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)